**2026 பிப்ரவரி மாதம் 16– ஆம் தேதி திங்கட்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 58/2016**

O.S. No.: 58/2016 – ஈஸ்வரன் த/பெ.பரமசிவம் DW5 16.02.2026

**சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. எனது சொந்த ஊர் அரண்மனைப்புதூர் என்றால் சரிதான். நான் ஆவண எழுத்தராக 1984 ம் ஆண்டு பதிவு செய்தேன் என்றால் சரிதான். வழக்கு விபரத்தை குறித்து எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன சீனிவாசனுக்கு மொத்தம் எத்தனை சொத்துக்கள் இருந்தன என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சீனிவாசன் இறப்பதற்கு முன்னர் அவரது குடும்பத்தில் என்ன பிரச்சனை இருந்தன, என்ன சூழ்நிலைகள் இருந்தன, அவரை யார் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முழு விபரங்களும் 4 ம் பிரதிவாதி சிந்துஜா சொன்ன முழுவிபரத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன்.

2. 10.10.2012 ம் தேதி உயில் பதிவு செய்யும்போது, உயிலை எழுதியது மட்டும் தான் எனது பங்கு என்றால், சீனிவாசன் விபரம் சொன்னதின் அடிப்படையில் நான் உயிலை தயார் செய்தேன் சீனிவாசன் என்னிடம் ஒருநாள் முன்பு வந்து பத்திரத்தை கொடுத்து விபரங்களை சொன்னார். மேற்சொன்ன விபரத்தை நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சீனிவாசனுடன் யார் யார் உடன் வந்தார்கள் என்றால் இரண்டு, மூன்று நபர்கள் வந்தார்கள், யார் என்று எனக்கு

ஞாபகமில்லை. சீனிவாசன் எந்தெந்த சொத்துக்களை உயில் எழுதிவைத்தார் என்ற விபரத்தை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றாலும், அந்த சொத்துக்களின் ஆவணத்தை கொடுத்தார், அதை வைத்து எழுதினேன். உயிலில் காட்டப்பட்டுள்ள சுயசம்பாத்திய சொத்துக்களா அல்லது பூர்வீக சொத்துக்களா என்பதை குறித்து எனக்கு தெரியாது என்றால் ஆவணங்களின் அடிப்படையில் உயிலை எழுதினேன்.

3. 10.10.2012 ம் தேதியில் உயில் என்னால் தயார் செய்யப்பட்டு, பதியப்பட்டது என்றால் சரிதான். 14.10.2012 ம் தேதி சீனிவாசன் இறந்துவிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, தகவல் வரவில்லை. உண்மையில் நான் நிரூபணவாக்குமூலத்தில் சொன்னதுபோல் சீனிவாசன் எனது நண்பர் என்றாலும், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஆவணங்களை என்னிடம் கொடுத்தார் என்பதும் பொய் என்றாலும், உண்மையில் அவ்வாறு நடந்திருந்தால் அவர் இறந்தது எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மைக்கு புறம்பான சாட்சியம் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.02.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.16 16:27:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
16.02.2026.